முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம். விழுப்புரம்.

**S.C.No.106/2015**

**(DW-1)**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெயப்பிரகாஷ் நாராயணன் | மதம் | |
| **த.பெ.** | தாமோதரன் | தொழில் | |
| ஊர் | விழுப்புரம் | வயது | 49 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 18,02,2026 |

இன்று (18.2.2026) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

சத்தியமாக சொல்கிறேன்

முதல் விசாரணை

எனது பெயர் ஜெயபிரகாஷ் நாராயணன் எனது தந்தையார் பெயர் தாமோதரன். நான் இந்த வழக்கில் ஒன்றாம் எதிரி நான் சம்பவ சமயத்தில் விழுப்புரம் கதவு எண் 1 / 3 பிளாட் நம்பர் 40 முத்துவேல் லே–அவுட் என்ற முகவரியில் வசித்து வந்தேன் அப்போது நான் விழுப்புரம் நகராட்சியில் பொதுப்பணி மேற்பார்வையாளராக பணிபுரிந்து வந்தேன்நான் ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்தவர் கடந்த 23 11 2008 ஆம் தேதி நண்பகல் நான் அலுவலகத்தில் பணி செய்து கொண்டிருந்தபோது எனது தம்பி தசரதன் எனது கைபேசிக்கு போன் செய்து அவர் திருச்சி நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்தபோதுஆனந்த் மருத்துவமனை எதிரே அவரது வாகனத்தின் சாவியை ஒருவர் பிடித்துக் கொண்டு தகராறு செய்கிறார் என்று உடனே சம்பவ இடத்துக்கு வருமாறும் என்னை அழைத்தார் நான் உடனே சம்பவ இடத்திற்கு சென்று விட்டேன் எனது தம்பியிடம் என்ன பிரச்சனை என்று விசாரித்தேன் அப்போது அந்த நபரை அடையாளம் காட்டி எனது தம்பி வேகமாக சென்ற போதுஅவரை மரித்து வண்டி சாவியை பிடுங்கிக் கொண்டு தர மறுத்துள்ளார்அந்த நபரிடம் நான் ஏன் வண்டி சாவியை கொடுக்க மறுக்கிறீர்கள் என்று கேட்டேன் அதற்கு அந்த நபர்நான் போலீஸ் என்றும் வாடா போலீஸ் ஸ்டேஷனுக்கு என்று சொல்லி என்னுடைய சட்டை காலரை பிடித்து இழுத்தார்அதற்கு நான் நானும் அரசு அலுவலர்தான் என்னுடைய சட்டையிலிருந்து கையை எடுங்கள் என்று சொன்னேன்அதில் ஆத்திரம் அடைந்த அவர் எனது இடது கையை முறுக்கி அருகில் இருந்த மின்சார கம்பத்தில் என்னை பிடித்து மோதினார். பிறகு யாருக்கோ போன் செய்து பேசிவிட்டு வண்டி சாவியை கொடுத்தார். அதன் பிறகு நான் அலுவலகம் சென்றுவிட்டேன். 23.11.2008 இரவு 8.30 மணிக்கு என் வீட்டில் முத்துவேல் லே அவுட்டில் இருந்தேன் அப்போது டவுன் ஸ்டேசனில் உதவி ஆய்வாளராக வேலை பார்த்த குமார் மற்றும் தகராறு செய்த ராமலிங்கம் காவலர், அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத 4 பேர் வீட்டுக்கு வந்து என்னை அழைத்து என்னிடம் தகராறு செய்த ராமலிங்கம் காவலரிடம் யார் உன்னிடம் தகராறு செய்தது என்று கேட்டுக்கொண்டே என்னை வாடா ஸ்டேசனுக்கு என்று இழுத்தார் நான் சட்டை போட்டுக்கொண்டு வந்து விடுகிறேன் என்று சொன்னேன். அதன் பிறகு

சப்இன்ஸ்பெக்டர் குமார் என்னை அடிக்க ஆரம்பித்துவிட்டார். அப்போது எனது மனைவி கலையரசி 8 மாத கர்ப்பிணியாக இருந்தார் அவரை அடிக்காதீங்க என்று தடுத்தார் அவரை உதவி ஆய்வாளர் குமார் போடி என்று தள்ளிவிட்டார். அதன் பிறகு என்னை ஜீப்பில் ஏத்தினார்கள். ஜீப்பில் ஏறியவுடன் உதவி ஆய்வாளர் குமார் என்னை முகத்தில் குத்தினார் நான் வலி தாங்க முடியாமல் கத்தினேன் பிறகு எனக்கு அருகே அமர்ந்திருந்த காவலர்கள் என்னை அடித்தார்கள். உதவி ஆய்வாளர் குமார் தடியால் என் முகத்தில் குத்தினார் அதில் எனக்கு மூக்கு மற்றும் மேல் உதட்டில் காயம் ஏற்பட்டது. அதனால் எனக்கு ரத்தம் கொட்டியது நான் வலி தாங்க முடியாமல் கத்தினேன் , கதறினேன் சுமார் 9 மணிக்கு என்னை விழுப்புரம் கிழக்கு காவல் நிலையம் (எ) டவுன் ஸ்டேசனுக்கு அழைத்துச் சென்றார்கள். ஜீப்புக்குள் இருந்தே என்னை எட்டி உதைத்தார்கள். நான் கீழே வந்து விழுந்தேன் ஸ்டேசனுக்குள்ளே அழைத்துச் சென்றார்கள் நான் லுங்கி கட்டியிருந்தேன் உதவி ஆய்வாளர் குமார் வந்து என்னிடம் ஜட்டி போட்டிருக்கியா என்று கேட்டார் நான் போடவில்லைஎன்று சொன்னேன் எனக்கு மூக்கிலிருந்து ரத்தம் வழிந்துகொண்டே இருந்தது அதனால் என்னுடைய பனியன் லுங்கி எல்லாம் ரத்தக்கரையால் நனைந்துவிட்டது. உதவி ஆய்வாளர் குமார் என்னுடைய பனியனை கழட்டச் சொன்னார், ஒரு அடையாளம் தெரிந்த ஒரு காவல் ஒரு குடத்து நிறைய தண்ணீரை என் மீது ஊற்றினார் உதவி ஆய்வாளர் குமார் என்னை தடியால் அடிக்க ஆரம்பித்தார் 4, 5 காவலர்களும் என்னை அடிக்க ஆரம்பித்தார்கள். அதில் ஒரு காவல ர் என் தலை முடியை பிடித்து இழுத்தார் அதனால் நான் வலி தாங்க முடியாமல் கீழே விழுந்து கத்தினேன் அப்போதும என்னை அடித்தார்கள். உதவி ஆய்வாளர் குமார் இவனை புடிங்க என்று சொன்னார் என்னை மல்லாந்து படுக்க வைத்து கை மீது 2 காவலர்களும் ஒவ்வொரும் ஒவ்வொரு காலை வைத்து அழுத்தினார்கள். அதேபோல் தொடையின் மேல் ஒவ்வொரு காவலர்களும் கால் வைத்து அழுத்தினார்கள். ஒவ்வொரு கால் மீதும் ஒவ்வொரு காவலர் கால் வைத்து அழுத்தினார் மொத்தம் 6 பேர் என்னை பிடித்து அழுத்தினார்கள். உதவி ஆய்வாளர் குமார் என்னை அடி பாதத்தில் லத்தியால் வைத்து அடித்தார். என்னை தூக்கச் சொல்லி என்னுடைய சூத்தில் அடித்தார் மற்றும் எல்லா இடத்திலும் என்னை அடித்தார், பிறகு 2 கைகளையும் நீட்டச் சொன்னார். நான் வலி தாங்க முடியால் கை வலிக்குது என்று சொன்னேன் அப்போதும் என் கையிலேயே அடித்தார். அப்போது யாரிடமிருந்தோ காவல் நிலையத்திற்கு போன் வந்தது என்னை அடிப்பதை விட்டுவிட்டு அந்த போனை அட்டன்ட் செய்தார். அப்போ ஒரு காவலர் வந்து என்னை அடித்தார். தொடை மற்றும் முதுகு கணுக்கால் ஆகிய பகுதிகளில் அடித்தார். அதன் பிறகு என்னை வயர்லஸ் ரூமுக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு 10 காவலர்கள் மாத்தி மாத்தி என்னை அடித்தார்கள். அப்போது உதவி ஆய்வாளர் குமார் என்னுடைய கையையும் மடக்கச் சொன்னார் முட்டியிலிருந்து விரல் வரை அடித்தார் முட்டியிலும் மணிக்கட்டிலும் அடித்தார் கடுமையாக தாக்கினார். பிறகு தொடை, கணுக்கால், முட்டி ,முதுகு பகுதியில் லத்தியால் தாக்கினார். பிறகு இந்த வழக்கின் புகார்தாரர் ராமலிங்கத்திடம் சப் இன்ஸ்பெக்டர் குமார் இவன் யார் பேரையோ சொன்னான் என்று சொன்னியே அது என்ன பெயர் என்று கேட்டார். அப்போது நான் மயக்க நிலையில் இருந்தேன் அப்போது அந்த காவலர் லோகநாதன் என்று சொன்னார். அப்போது பக்கத்திலிருந்த இன்னொரு காவலர் எஸ் சி மக்களோட லீடர் தான் லோகநாதன் என்று சொன்னார். பிறகு என்னிடம் வந்து உதவி ஆய்வாளர் குமார் "நீ என்ன பெரியகாலணி ரவுடியா , போலிஸ்காரன் மேலேயே கை வைக்கிறியா மாட்டுக்கறி திங்கிற எஸ் சி நாயே உனக்கே இவ்ளோ திமிரா" என்று சொன்னார். பக்கத்தில் இருந்த காவலர் வந்து ஆமா இவனை பார்த்தா

திமிர் பிடித்தவன் மாதிரி தான் இரு க்கான் என்று சொன்னார். பிறகு என்னை ஸ்டேசனிலிருந்த ஜீப்பில் ஏற்றுவதற்கு அழைத்து வந்தார்கள். என்னால் நடக்க முடியவில்லை. ஜீப்பில் ஏற சொன்னார்கள். என்னால் நடக்க முடியவில்லை, அப்போது பின்னால் இருந்த காவலர் என் முதுகில் எட்டி உதைத்தார். நான் ஜீப்புக்கு பின்னால் போய் விழுந்தேன். மற்ற காவலர்கள் என்னை பிடித்து ஜீப்பின் உள்ளே தூக்கி போட்டார்கள். எனக்கு அடித்த இடம் எல்லாம்ரத்ததம் கசிந்துகொண்டே இருந்தது. அந்த ஜீப்பில்என்னிடம் தகராறு செய்த புகார்தாரர் ராமலிங்கம் இன்னொரு காவலர் கூட வந்தார்கள். அந்த ஜீப்பு மேற்கு காவல் நிலையத்திற்கு என்னை அழைத்துச் சென்றது மணி சுமார் 10.30 மணிக்கு அழைத்துச் சென்றார்கள். விழுப்புரம் மேற்கு காவல் நிலையத்தில் இன்ஸ்பெக்டர் மணி என்னை பார்த்து " நீ என்ன பெரிய ரவுடியா போலிஸ்காரன் மேலயே கையை வைக்கிறயா " என்று கேட்டார் நான் அதற்கு " அவர் தான் என்னை அடித்தார்" என்று சொன்னேன். அவர் அடித்ததால் தான் உனக்கு கை உடைந்தது என்று கேட்டார்கள். இல்ல ராமலிங்கம் தான் என்னை தாக்கியதால் தான் ்என் கையில் அடிப்பட்டது என்று சொன்னேன். உடனே இன்ஸ்பெக்டர் மணி , புகார்தாரர் ராமலிங்க்த்தை பார்த்து "இவன் தானே உன்னுடன் தகராறு செய்தான் இவனை அடி " என்று சொன்னார் உடனே ராமலிங்கம் கையால் என் முதுகில் அடித்தார் . நான் கதறினேன் பக்கத்தில் கனகராஜ் என்ற காவலர் என்னை பார்த்து "தேவடியா பையா போலிஸ்காரன் மேலயே கையை வைக்கிறயா" என்று என்னை அடித்தார். வழக்கின் புகார்தாரர் ராமலிங்கம் விழுப்புரம் மேற்கு காவல் நிலையத்தின் எதிரே உள்ள அரசு மருத்துவமனைக்கு போய் சிகிச்சை பெற்றதற்கு ஓபி சீட்டு வாங்கினு வந்துட்டேன் இவன் பேரில் எப் ஐ ஆர் போடுங்க என்றுசொன்னார் அப்போது தான என் மீது எப் ஐ ஆர் போடுராங்கன்னு தெரியும், என்னிடம் எழுதிய பேப்பரில் இன்ஸ்பெக்டர் மணி என்னிடம் கையெழுத்து கேட்டார் நான் படித்து பார்த்து தான் போடுவேன் என்று சொன்னேன். அப்போது அடர்த்தியாக மீசை வைத்திருந்த ஒரு காவலர் என்னை அடித்து எழுதப்பட்ட தாளில் கைநாட்டு பெற்றார். அதன் பிறகு என்னுடன் பணி புரியும்எ னது நண்பர்களான நகராட்சி பணியாளர்கள் முத்துவேல், கார்த்தி இருவரும் நேரில் வந்து இன்ஸ்பெக்டரிடம் பேசிவிட்டு என்னிடம் வந்தார்கள். என்ன நடந்தது என்று என்னிடம் கேட்டார்கள். என்னிடம் ்கேட்டுவிட்டு ஒரு சட்டையை காவலர் கனகராஜிடம் கொடுத்தார்கள். பிறகு முத்துவேலும், கார்த்தியும் சென்றுவிட்டார்கள். கொஞ்சம் நேரம் கழித்து நான் சட்டையை கனகராஜ் காவலரிடம் கேட்டேன். சட்டை உனக்கு ஒரு கேடா என்று சொல்லி என்னை லாக்கப்பில் வைத்து பூட்டிவிட்டார். சட்டையை கொடுக்கவில்லை அன்று இரவு சாப்பாடும் கொடுக்கவில்லை. 24.11.2008 அன்று காலை 8.30 மணிக்கு விழுப்புரம் மேற்கு காவல் நிலையத்திற்கு விழுப்புரம் நகராட்சி நகர மன்ற தலைவர் திரு ஜனகராஜ் அவர்கள் ஸ்டேசனுக்கு வந்து என்னை பார்த்தார். பிறகு அச்சிட்ட தாளில் காவலர்கள் என்னிடம் கைநாட்டு பெற்றார்கள். பின்பு என்னை ஆட்டோவில் ஒரு காவலரோட காவல் நிலையத்திற்கு எதிரே உள்ள மாவட்ட அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். எங்களுக்கு பின்னால் 4, 5 காவலர்கள் வந்தார்கள். அரசு மருத்துவமனையில் ரவுன்சில் இருந்த மருத்துவர் ராதாகிருஷ்ணனை போன் மூலம் தொடர்பு கொண்டு காவலர்கள் அழைத்தார்கள். ராதாகிருஷ்ணன் டாக்டர் வந்தவுடன் அடர்த்தியாக மீசை வைத்திருந்த காவலர் டாக்டரை பார்த்து ஆள் நல்லாதான் இருக்கான்னு சொல்லி எழுதி அனுப்புங்கையா என்று சொன்னார் அதற்கு நான் சட்டையை கழற்றினேன் என் உடம்பில் உள்ள காயத்தை காண்பித்தேன். என்னை போலி'ஸ் அடித்து சித்திரவதை செய்தார்கள் என்று டாக்டரிடம் சொன்னேன். அப்போது அடர்த்தியாக மீசை வைத்திருந்த காவலர் லத்தியால என் இடுப்பில் குத்தினார் யாருடா

உன்னை அடிச்சது என்று கேட்டார். டாக்டர் யோவ் அவரை மிரட்டாதையா அவர் சொல்லட்டும் என்று சொன்னார், என் காயத்தை காட்டச் சொன்னார் நான் நிர்வாணமாக எல்லா காயத்தையும் காண்பித்தேன். டாக்டர் எனக்கு மாத்திரை கொடுத்தார், பிறகு என்னை விழுப்புரம் ஜெஎம் –1 கோர்ட்டில் அழைத்து வந்து வெளியில் உட்கார வைத்தார்கள். மேஜிஸ்ட்டிரேட் இல்லை அவர் லீவ் என்று என்னை சுமார் 3 மணி நேரம் உட்கார வைத்தார்கள். நான் உடம்பு வலி தாங்க முடியாமல் தரையில் படுத்துவிட்டேன். வக்கீல்கள் வந்து எ்ன்னை விசாரித்தார்கள். யார் அடித்தது என்ன பிரச்சனை என்று கேட்டார்கள். எ ன்னுடன் வந்த காவலர் என்னை வெளியே கூட்டி்கொண்டு சென்றார். என்னால் நடக்க முடியவில்லை. விழுப்புரம் ஜெஎம் –1 கோர்ட்டுக்குவெளி வாசலில் நான் நடக்க முடியாமல் படுத்துவிட்டேன். அங்கேயும் வக்கீல்கள் விசாரித்தார்கள். என் உறவினர்களும் வந்துவிட்டார்கள். பத்திரிக்கையாளர் ரிப்போட்டர் அனைவரும் வந்துவிட்டார்கள். என் உறவினர்கள் வந்து காவலரை பார்த்து இப்படி தான் மாட்ட அடிக்கறி மாதிரி அடிக்கனுமா என்று கேட்டார்கள். வக்கீல்களும் கேட்டார்கள். உடனே வழிக்காவல் வந்த அய்யனார் என்ற காவலர் யாருக்கோ போன் பண்ணி பிரச்சனை பெரிசா ஆவுது கொஞ்சம் வாங்க என்று சொன்னார். உடனே டிஎ ஸ்பி தட்சிணாமூர்த்தி , எஸ்பி இன்ஸ்பெக்டர் ராமநாதன், துணை ஆய்வாளர் ராதிகா மற்றும் நிறைய காவலர்கள் கோர்ட்டுக்குள் வந்துவிட்டார்கள். என்னை டாட்டா சுமோ காரில் ஏற்றினார்கள். வழக்கறிஞர்களும் எனது உறவினர்களும் என்னை ஆஸ்பத்திரிக்கு தான் கூட்டிக்கொண்டு போகனும் ஆம்புலன்சை வரச்சொல்லுங்க என்று சொன்னார்கள் காவலர்கள் ஆஸ்பத்திரிக்கு என்னை கூட்டிப்போவதாகத் தான் சொன்னார்கள். என்னை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்வதாக சொன்னவர்கள் என்னை திருக்கோவிலூர் நீதிமன்றத்திற்கு தான் அழைத்துச் சென்றார்கள். திருக்கோவிலூர் நீதிமன்றத்தில் காவலர்கள் என்னை அடித்துவிட்டார்கள் என்று சட்டையை கழற்றி காயத்தை மேஜிஸ்ட்ரேரிடம் காட்டினேன். என்னை பார்த்த மேஜிஸ்ட்ரேட் அவர்கள் என்னை மருத்துவமனையில் சேர்க்க வேண்டும் என்று காவலரிடம் சொன்னார்கள், காவலர்கள் ஜெயிலில் மருத்துவ வசதி உள்ளது அங்கேயே சிகிச்சை கொடுக்க ஏற்பாடு செய்கிறோம் என்று சொன்னார்கள் , அதனை நீதிபதி ஏற்றுக்கொண்டார். என்னுடைய வக்கீல் செந்தில்குமார் அவரை மருத்துவ மனையில் தான் சேர்க்க வேண்டுமென்று கேட்டார். அதை காவலர்கள் பார்த்துக்கொள்வார்கள் தேவைப்பட்டால் வெளி மருத்துவமனையில் மருத்துவம் கொடுப்பார்கள் என்று நீதிபதி சொல்லிவிட்டார். அதன் பிறகு டாடாசுமோ காரில் திரு்கோவிலூரிலிருந்து விழுப்புரம் கூட்டி வந்தார்கள, விழுப்புரம் மாம்பழப்பட்டு ரயில்வே கேட்டுக்கு முன்னாடி சுமோ காரை நிறுத்திவிட்டு வேனில் என்னை ஏற்றினார்கள். 24.11.2008 அன்றைக்கே சுமார் 7.30 மணிக்கு கடலூர் மத்திய சிறைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு என்னை பரிசோதனை செய்தார்கள். அங்கு எம்என்ஏ என்ற மருத்துவ துறையில் பணிபுரிவரை என்னை பரிசோதனை செய்யச் சொல்லி ஜெயில் அலுவலர்கள் சொன்னார்கள். என்னை பரிசோதித்த எம் என் ஏ இவரை ஜெயிலில் வைக்க முடியாது மருத்துவ மனைக்கு தான் கூட்டிக்கொண்டு போக வேண்டும்என்று சொன்னார்கள் அப்போது விழுப்புரத்திலிருந்து காவல் படுத்தி வந்த உதவி ஆய்வாளர் ராதிகா என்பவர் எம் என் ஏவை அழைத்துச் சென்று பேசினார்கள். அதன் பிறகு என்னை ஜெயிலில் அனுமதித்து சிறையில் இருந்த மருத்துவமனையில் உள் நோயாளியாக அனுமதித்தார்கள். மறுநாள் காலையில் என்னை பரிசோதனை செய்தார்கள், சிகிச்சை கொடுத்தார்கள் எனக்கு காயம் பட்டதை குறித்துக்கொண்டார்கள் யார் அடித்தது என்று கேட்டார்கள் போலிசார் அடித்தார்கள் என்று நான் குறிப்பிட்டுச் சொன்னேன். ஜாமீன் பெறும் வரை தொடர்ச்சியாக

4.12.2008 வரையில் சிறை மருத்துவமனையில் நான் உள் நோயாளியாக சிகிச்சை பெற்றேன். திருச்சி நீதிமன்றத்தில் கையெழுத்திடவேண்டுமென்று கண்டிசன் பெயில் கொடுத்தார்கள். அதனால் நான் திருச்சியில் தங்கியிருந்தேன். காவலகள் அடித்த இடம் அனைத்தும் வீங்கி காயமாகிவிட்டது, இடது பாதம் வீங்கி விட்டது இடது கை வீங்கிவிட்டது. 6.12.2008 அன்று திருச்சி மகாத்மா காந்தி அரசு மருத்துவக் கல்லூரியில் புற நோயாளியாக தொடர்ந்து சிகிச்சை பெற்றேன். எக்ஸ்ரே எடுத்தார்கள். சிகிச்சை கொடுத்த மருத்துவர் ரிப்போர்ட் கொடுத்தார். பெயில் கன்டிசன் தளர்த்துவதற்காக ரிப்போர்ட் கொடுத்தார். மருத்துவ சான்று கொடுத்தார். அக்டோபர் மாதம் 2008ல் என்னுடைய அலுவலகத்தில் எனக்கு கீழ் பணிபுரியும் திரு விஜயகுமார் எலக்ரிஷியன் திரு பிரகாஷ் ஓட்டுனர் முறைகேட்டில் ஈடுபட்டதில் சரியாக வேலை செய்யவில்லை நான் அவர்களை கண்டித்தேன் அவாகள் என் மீது விழுப்புரம் டவுன் ஸ்டேசனில் ஒரு பொய் புகார் கொடுத்தார்கள். அந்த பொய் புகாரின் பேரில் உதவி ஆய்வாளர் குமார் என்னை ஸ்டேசனில் வந்து விசாரித்தார். இது அலுவலக பிரச்சனை கமிஷ்னரிடம் தான் புகார் கொடுக்கவேண்டும் நீங்க விசாரிக்க கூடாது என்று சொன்னேன். அதற்கு உதவி ஆய்வாளர் நீ என்ன நாட்டை திருத்த வந்துட்டியா எவன் என்ன செய்தால் உனக்கு என்ன என்று சொன்னார் என்னையே எதிாத்து பேசறியா நான் உன் பேரில் கேஸ் போடாமல் விடமாட்டேன் என்று சொன்னார். அதன் பிறகு சமரசமாக எழுதி வாங்கினார் . உதவி ஆய்வாளர் குமார் இந்த மோட்டிவ்ல் தான் என் மீது இந்த பொய் வழக்கை போட்டுள்ளார். ஜாமினில் வெளி வந்த பிறகு நான் அனைத்து உயர் அதிகாரிகளுக்கும், முதல்வர் , டிஜிபி , உள் துறை செயலாளர் , எஸ் பி– டிஎஸ்பி, மனித உரிமை ஆணையம் , எஸ் சி எஸ் டி ஆணையம் ஆகியோர்களுக்கு காவல் துறை சித்திரவதை செய்ததை புகார் மனுவாக அனுப்பினேன். அந்த புகார் மனுவில் நடவடிக்கை காலதாமதம் ஆனதால் நினைவூட்டல் கடிதம் அனுப்பினேன். 2009 பிப்ரவரி மாதம் விழுப்புரம் மேற்கு காவல் நிலையத்தில் எஸ்சிஎஸ்டி வன் கொடுமை சட்டத்தில் காவலர்கள் மீது வழக்கு தாக்கல் செய்தார்கள். வழக்கு எண். 70/2009 வழக்கு பதியப் பட்டது. எஸ்சிஎஸ்டி வழக்கு தான் பதிவு செய்தார்கள். அதில் என்னை விசாரிக்கவில்லை. என்னை அடித்த காவலர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் அதே காவல் நிலைய அலுவலர்கள் விசாரித்தால் நியாயம் கிடைக்காது என்று நான் சிபிசிஐடி விசாரணை வேண்டி நான் மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேன். அந்த வழக்கு தற்போதும் விசாரணையில் நிலுவையில் உள்ளது. அதே சமயத்தில் 2014ல் மனித உரிமை ஆணையத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அதுவரையில் இந்த வழக்கில் என் மீது குற்றப்பத்திரிக்கையும் தாக்கல் செய்யவில்லை. மனித உரிமை ஆணையத்தில் வழக்கு எடுத்த பிறகு தான் இநத வழக்கில் என் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தார்கள். என்னை விசாரிக்கவே இல்லை. ஆனால் வழக்கை ஆர்சிஎஸ் செய்துவிட்டதாக எனக்கு தபால் வந்தது. நீதிமன்றத்தில்ஆட்சேபணை தெரிவிக்கலாம் என்று அதில் குறிப்பிடப்பட்டு நீதிமன்றத்திலிருந்து வந்தது நான் எனது ஆட்சேபணையை நீதிமன்றததில் கொடுத்தேன். மனித உரிமைய ஆணைய வழக்கு விசாரணைமுடித்து 2019ல் தீர்ப்பு வழங்கப்பட்டது அந்த தீர்ப்பில் காவலர்கள் மனித உரிமை மீறலில் ஈடுபட்டுள்ளார்கள் என்றும் என்னை சித்திரவதை படுத்தியிருக்கிறார்கள் என்பது உறுதிசெய்யப்பட்டிருக்கிறது என்று எனக்கு ரூ.5,00,000/– நஷ்ட ஈடு கொடுத்தார்கள். மனித உரிமை மீறிலில் தொடர்ச்சியாக பல்வேறு வழக்குகளில் ஈடுபட்ட உதவி ஆய்வாளர் குமாருக்கு பதவி உயர்வு கொடுக்கக் கூடாது என்று உத்தரவிடப்பட்டது. மனித உரிமை மீறலில் ஈடுபட்ட உதவி ஆய்வாளர் குமார், ஆய்வாளர் மணி, காவலர் ராமலிங்கம் ஆகியோர் மீது குற்றவியல் நடவடிக்கை

எடுக்க வேண்டுமென்று மனித உரிமை ஆணையம் உத்தரவிட்டது. அதனை எதிர்த்து அவர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார்கள. நான் அந்த வழக்கில்எ னது தரப்பு வாதத்தை கொடுத்தேன், அதனை ஏற்று அவர்கள் தாக்கல செய்த மனுவை தள்ளுபடி செய்தார்கள். எனக்கு பணப் பயன்கள் கிடைக்கவும் அவர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை மற்றும் குற்றவியல் நடவடிக்கை எடுக்கவும் அரசாணை வழங்கபப்பட்டது. எனக்கு இழப்பீடு கொடுத்துவிட்டார்கள். ஆனால் அந்த காவல் துறையினர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. நான் காவல் துறையினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேன் அது தற்போதும் நடந்துகொண்டிருக்கிறது. நான இந்த வழக்கில போலிசார் சொன்னது போல எந்த தவறும் செய்யவில்லை. என் மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டது நான் தான். நான் சொல்வதில் உண்மை உள்ளது என்பதால் தான் மனித உரிமைஆணையமும் அதனை தொடர்ந்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றமும், காவலர்களுக்கு எதிராக உத்தரவிட்டுள்ளது. தமிழக அரசும் அரசாணை வழங்கியுள்ளது ஆகவே வழக்கிலிருந்து என்னை விடுவிக்க வேண்டும். எனது தரப்பு வழக்கினை நிலைநாட்ட எனது தரப்பில் உள்ள ஆவணங்களை தாக்கல் செய்ய அனுமதி வழங்க வேண்டுகிறேன்.

சாட்சி வேண்டுகோளுக்கிணங்க ஆவணங்கள் தாக்கல் செய்து குறியீடு செய்ய முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.
**Sd/-.A.Tamilselvan, M.L.,**
Principal Subordinate Judge,
Villupuram